00030 (முழுப்பதிப்புரிமை உடையது)

(முழுப்பதிப்புரிமை உடையது)

**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்**

இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை 2013(1)

**இலங்கையின் சட்ட முறைமை (02)**

3 மணித்தியாலங்கள்

**5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**
**அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.**

---

1. "கண்டி யுகத்தில் இந்நாட்டின் சிங்கள முடியரசுகளின் மிக விஷேடமான ஒரு அம்சமாக மிகவுமே முறைமை வாய்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட நீதிமன்ற முறைமை காணப்பட்டது." அக்காலத்தில் காணப்பட்ட நீதிமன்ற ஒழுங்கமைப்பின் பிரதான நிறுவனங்களை விபரித்து விளக்குக.

(20 புள்ளிகள்)

2. (அ) " உரோம டச்சுச் சட்டம்" என்பதன் மூலம் கருதப்படுவது யாது? (05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் உரோம டச்சுச் சட்டம் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்படும் போது "பதாவியன் சாசனம்" எவ்வாறு முக்கியத்துவம் பெற்றிருந்தது? (05 புள்ளிகள்)

(இ) " உரோம டச்சுச் சட்டம்" இலங்கையின் சட்ட முறைமையில் தற்காலத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை விபரிக்குக. (10 புள்ளிகள்)

3. "இந் நாட்டின் முஸ்லிம் சட்டம் ஒரு தனியார் சட்டமாகும்." முஸ்லிம் சட்டத்தின் ஏற்புடைமைக்கு விஷேட கவனம் செலுத்தி விளக்குக.

(20 புள்ளிகள்)

4. ஆங்கிலச் சட்டம், சாசனங்கள் மற்றும் நீதிமன்றத்தீர்புகள் மூலம் இந் நாட்டின் சட்ட முறைமையினுள் ஊடுருவியமை பற்றிப் பரீட்சிக்குக.

(20 புள்ளிகள்)

5. "எந்தவொரு நாட்டிலும் சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனின் ஒழுங்கமைக்கப்பட்ட நீதிமன்றப் படிமுறை (Hierarchy of Courts) அத்தியவசியமான காரணியாகும". இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நீதிமன்றப் படிமுறையினை இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பரீட்சிக்குக.

(20 புள்ளிகள்)

6. (அ) "ரிட்"(Writs) என்பதனால் கருதப்படுவது யாது? (05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்படுகின்ற ஐந்து ரிட்கள் பற்றி சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

7. 1978ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதி பரிபாலன சட்டத்திற்கு கவனம் செலுத்தி இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினை விளக்குக.

(20 புள்ளிகள்)

8. சிறுகுறிப்பெழுதுக.

(அ) மலை நாட்டுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பூகோளப் பிரதேசம்.
(ஆ) 1707இல் ஒருங்கு சேர்க்கப்பட்ட தேசவழமைச்சட்டம்.
(இ) ஒபிரர் டிக்டா (Obiter dicta)
(ஈ) முதற் சந்தர்ப்ப நீதிமன்றம்.

(20 புள்ளிகள்)

************